## மயிலாடுதுறை மாவட்டம்

## இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2023

## தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம். மதிப்பெண்கள் : 90

பகுதி – 1

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** **14x1=14**

1) ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலை எழுதியவர்

அ) சிற்பி பாலசுப்பிரமணியம். ஆ) தி.சு.நடராசன்
இ) பாரதியார். ஈ) பரலி சு நெல்லையப்பர்

2) வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம். . ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை. ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

3) “மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே” என்னும் இவ்வரிகள் இடம்பெற்ற நூல்

அ) தமிழ்விடுதூது. ஆ) குறுந்தொகை

இ) புறநானூறு. ஈ) ஐங்குறுநூறு

4) “எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே” என்ற பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

. அ) தனிக்குடும்ப முறை. ஆ) தந்தைவழிச் சமூகமுறை

இ) தாய்வழிச் சமூகமுறை. ஈ) விரிந்த குடும்பமுறை

5) சுவடியோடு பொருந்தாத ஒன்றை தேர்வு செய்க

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச்சாறு

இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

6) தொல்காப்பியத்தில் கூறப்படும் ஓதற்பிரிவிற்கு உரிய ஆண்டுகள்

அ) மூன்று ஆண்டுகள் ஆ) இரண்டு ஆண்டுகள்

இ) ஐந்து ஆண்டுகள் ஈ) ஓராண்டு

7) வேடுவர் தலைவன்----------- ஆவான்

அ) சுக்ரிவன் ஆ) குகன்

இ) இராமன் ஈ)வீடணன்

8) பகைவராலும் அழிக்க முடியாத அரண்

அ)அறிவு ஆ) நட்பு இ) படை ஈ) செல்வம்

9) தலைக்குளம் என்னும் கதையை எழுதியவர்

அ)உத்தமசோழன் ஆ)தோப்பில் முகமது மீரான் இ) பூமணி ஈ) ஐராவதம் மகாதேவன்

10) தொல்நெறி – என்பதன் இலக்கண குறிப்பு

அ)வினைத்தொகை ஆ)பண்புத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) உவமைத்தொகை

11) ஆராய்ந்து சொல்கிறவர்

www.Padasalai.Net

அ)அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர்

இ) தூதுவர் ஈ) உறவினர்

12) அதிசய மலரின் புன்னகையை பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது

அ)கடந்தகால துயரங்களை ஆ) ஆட்களற்றபொழுதை

இ)பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

13) சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி

அ)உதகமண்டலம் ஆ) விழுப்புரம்

இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

14) ச.த.சற்குணரின் உரையைக் கேட்டு துண்டப்பெற்ற மயிலை சீனி வேங்கடசாமி எழுதிய நூல்

அ)பௌத்தமும் – தமிழும் ஆ)இசுலாமும் - தமிழும்

இ) சமணமும் - தமிழும். ஈ) கிறித்தவமும் – தமிழும்

பகுதி – 2

பிரிவு – 1 3x2=6

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக**

15) எதிர்பாராத விருந்தினராக ஜலாலுதீன் ரூமி குறிப்பிடுவது யாரை?

16) கலிவிழா,ஒலிவிழா விளக்கம் தருக?

17) இறைமகனார் அடைந்த துன்பத்தை கண்டு மக்கள் எவ்வாறு வருந்தினர்?

18) ஞாலத்தின் பெரியது எது?

பிரிவு – 2 2x2= 4

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக**

19) நடை அழகியல் பற்றி தொல்காப்பியம் கூறும் கருத்தை குறிப்பிடுக?

20) சங்ககாலத்தில் தாய் வழி சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

21) ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணிகளின் பெயர்களை குறிப்பிடுக?

பிரிவு – 3 7x2=14

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக**

22) பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க

கான் – காண்

23) தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக

பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்

24) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக

இப்ப எனக்கு புரிஞ்சு போச்சு நீயும் புரிஞ்சிக்கோ

25) சொல்லை பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க

அ) பலகை. ஆ) கோவில்

www.Padasalai.Net

26) தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக

நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது

27) ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக

அ) வந்து ஆ)கண்டான்

28) ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக

அ)இனநிரை ஆ)வானமெல்லாம்

29) கீழ்காணும் சொல்லுருபுகளை பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க

முன்

30) கலைச்சொல்லாக்கம் தருக

அ) Fiction ஆ) Allegation

**பகுதி - 3**

**பிரிவு – 1** **2x4=8**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக**

31) "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்து பூக்காடாம் வானமெல்லாம்" தொடர் வெளிப்படுத்தம் காட்சி நயத்தை விளக்குக

32) சடாயுவை தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக

33) பங்குனி உத்திர திருவிழா நடைபெற்ற முறையை திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

34) யானை புக்க புலம் போல தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக

**பிரிவு -2** **2x4=8**

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக**

35) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் விளக்குக

36) இன்றைய கூட்டுக் குடும்பம் பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே விளக்குக

37) மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை தொகுத்துரைக்க

38) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றை குறிப்பிடுக

**பிரிவு – 3** **3x4= 12**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக**

39) அ) உவமை அணியை சான்றுடன் விளக்கு (**அல்லது**)

ஆ)" சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்

ஏமப் புணையைச் சுடும்" இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக

40) இலக்கிய நயம் பாராட்டுக (மைய கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா !
நன்மை செய்பவரே - உலகம்

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

நாடும் மேற்குலத்தார் !

தின்மை செய்பவரே – அண்டி

தீண்ட ஒண்ணாதார் ! - கவிமணி

41) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக

அ) யானைக்கும் அடி சறுக்கும்

**அல்லது**

ஆ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

42) நெய்தல் திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கினை எழுதுக

43) தமிழாக்கம் தருக

1) A New Language is a New Life

2) If you want people to understand you speak their language

3) Knowledge of language is the door way to wisdom

4) Learning is a treasure that will follow its owner everywhere

**பகுதி – 4**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** **3x6=18**

44) அ) தமிழின் சீரிளமை திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக

**அல்லது**

ஆ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் – நிறுவுக

45) அ) பண்டைக்கால கல்விமுறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளை தொகுத்து எழுதுக

**அல்லது**

ஆ) நிர்வாக மேலாண்மை குறித்து வெ..இறையன்பு கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக

46) அ) சாலை விபத்திலாத் தமிழ்நாடு இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை

**அல்லது**

ஆ) நடிகர் திலகம் என்ற பட்டம் சிவாஜிக்கு பொருத்தமானதே என்பதை நிறுவுக

**பகுதி - 5** **4+2=6**

47) அடிப்பிறழாமல் செய்யுள் வடிவில் தருக

அ) “ஒருமையுடன்” என தொடங்கும் தெய்வமணிமாலை பாடலை அடிபிறழாமல் எழுதுக

ஆ) “செயல்” என முடியும் குரலை அடிப்பிறழாமல் எழுதுக

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net